உ
சிவமயம்

REGISTERED AS A NEWS PAPER IN CEYLON
RP. M. G. NO. H. A. 19/300 of 1939

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணி மாதம் 28-ந் உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே

புத் ருக] யாழ்ப்பாணம் — சர்வசித்து ஞூ பங்குனி மீ ௧௦ உ (1948 மார்ச்சு 23 செவ்வாய்க்கிழமை) [இல ௯௬

# நலந்தரும் ராம நாம மகிமை

## பிறவிப் பிணிக்குப் பெரும் மருந்து

### "ராம்" என்பதன் அர்த்தம்

(திரு, க. இராமச்சந்திரன் கொழும்பு)

அடுத்த வியாழக்கிழமை, தென் கன்னடம், ஆனந்தாஸ்ரம ஸ்தாபகராம் சுவாமி ஸ்ரீ ராமதாசர் அவர்களின் ஜென்ம நட்சத்திரம் பொருந்தியுள்ளது அன்றும் அடுத்த தினங்களிலும் அவரது ஜெயந்திவிழா இந்தியாவிலும் இலங்கையிலும் சிறப்பாகக் கொண்டாடப்படும். சுவாமிகளின் சிவிய சரித்திரம் இந்துசாதன வாசகர்கள் நன்கறிந்தவிஷயமாகும். ஆகையால் அவர் தமது பிறவியின் முக்கிய நோக்கமாகக் கொண்டு பரப்பவந்த ராமநாம மகிமையைப்பற்றி மாத்திரம் சிறிது ஆராய்வாம்.



சென்ற நூற்றாண்டில் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் சுவாமி ராமதீர்த்தர் முதலாம மஹான்கள் ராமநாம மகிமையைப்பற்றி உபதேசித்தபோதிலும், அதை விளக்குவதே தமது சிறப்புப் பணியாகக் கருதி வாழ்ந்தும பாடியுங் காட்டியவர் ஸ்ரீ தியாகராஜசுவாமிகள் ஒருவரே. அந்தபோல் இந்த நூற்றாண்டிலும், காந்தியடிகளும் பிறரும் ராமநாம ஜெபத்தைப் பரப்பியபோதிலும். அந்நாமத்தின் பெருமையையும் மகிமையையும் அதனால் தாமடைந்த பயனையும் வாழ்க்கையாலும் வாக்காலும் உலகுக்கு விளக்குவதே தமது தனித்தொண்டாகக் கொண்டு இன்றுவாழ்பவர் சுவாமி ராமதாசர் ஒருவரேயாம், அவர் பெற்ற உபதேசமந்திரம் "ஸ்ரீ ராம் ஜெயராம் ஜெயஜெயராம", அவர் அடியார்க்கு உபதேசிப்பதும அதையேயாம்,

கவிச் சக்கரவர்த்தியாகிய கம்பர் கீழ்க்கண்ட பாடலில் 'ஜெயஜெய' என்ற கருத்தையே அழகாயமைத்துள்ளார்.

நாடிய பொருள்கை கூடும்
ஞானமும் புகழு முண்டாம்
வீடியல் வழியு மாக்கும்
வேரியங் கமலை நோக்கும்
நீடிய வரக்கர் சேனை
நீறுபட் டழிய வாகை
சூடிய சிலையி ராமன்
தோள்வலி கூறு வோர்க்கே"

இதில், ராமன் தோள்வலி — ராம ஜெயம். அந்த மகா மந்திரத்தைப் பாராயணஞ் செய்வோர்க்கு ஞானம் புகழ் முதலிய சாதனம், லட்சுமி கடாட்சம் முதலாம் பேறுகள் கிடைக்கும் என்பதாம்.

'ஓம்' என்னும் பிரணவமந்திரமும் 'ராம' என்னும் மந்திரமும் ஒன்றேயென்பது வால்மீகிவாக்காகும். 'ராம' என்னும் பதத்தில், அஷ்டாக்கரத்தின் (நாராயணாய நம) இரண்டாம் எழுத்தும், பஞ்சாட்சரத்தின் (நமசிவாய) இரண்டாமெழுத்துங் கூடி நிற்பதால் அதனைத் தாரக மந்திரமென்பர். யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் இயற்றிய "ஸ்ரீராம் ஜெயராம் ஜெயஜெயராம்" என்ற அழகான கீர்த்தனையில், "நாராயண ஓம் நமச்சிவாயவெனுஞ், சாரமான நல்ல தாரக மந்திரம" என்று அதே கருத்தை விளக்கியுள்ளார்.

"நன்மையுஞ் செல்வமும்
நாளும் நல்குமே
தீமையும் பாவமும்
சிதைந்து போகுமே
சென்மமும் மரணமு
மின்றித் தீருமே
இம்மையே யிராமவென்
றெழுத்தி ரண்டினால்."

என்று கம்பர் கூறியது வெறுங் கற்பனையல்ல, முழுவதும் உண்மையென்பதை இன்று நாம் சுவாமி ராமதாசர் வாழ்க்கையில் கண்கூடாகக் காண்கின்றோம்.

சீதாபிராட்டியார் தானும் அநுபவித்தறியாத ராமநாம திவ்யரசத்தை அநுமார் அநுபவித்துப் பெருமையடைந்ததனாலன்றோ, அவர் இன்றும் வைஷ்ணவ சம்பிரதாயத்தில் சிறிய திருவடியெனப் போற்றப்படுகின்றார். ஸ்ரீராமனிலும் பார்க்க அவனின் திருநாமம் கூடிய மகிமையும் வலிமையும் உடைத்தென்பது இதனால் வெளிப்படை இதேகருத்தைத் துளசிதாசர் தம் பாடல்களில் வலியுறுத்தியுள்ளார். ஒருபாட்டில், "ராமா! நின் பாதந் தீண்டியதால் ஈடேற்ற மடைந்தது அகலிகை ஒருத்தியே! ஆனால் உனது நாமத்தினால் ஈடேற்றப்பட்டவர்களின் தொகையைக் கணக்கிட முடியாது" என்கிறார்.

ஆத்மீக சாதனத்திற்கு பகவானுடையநாமரூபங்கள் முக்கியமானவை. அவருடைய திருநாமங்கள் எமது அபிப்பிராயங்களின் ரூபம் போன்றவை. ஐம்புலன்கட்கு அப்பாலுள்ள ஆத்ம தரிசனத்தை ஆண்டவனின் நாமங்களின் உதவியைக் கொண்டு பெறலாம். அதாவது நம் மனதின் கண்ணே அப் பெருமானின் திருவடி வத்தைச் [illegible]

பிரார்த்தனை

வடக்குங் குமக்குன் றிரண்டேந்தும் வண்டன் மகளிர் சிறுமுன்றில்
வாரிக் குவித்த மணிக்குப்பை வானு றடைப்ப வழிபிழைத்து
நடக்குங் கதிர்செ ற்பரிசிலா நதுவெண் பிறைகைத் தோணியதா
நாண்மீன் பரப்புச் சிறுமிதப்பா நாப்பண் மிதப்ப நாற்கோட்டுக்
கடக்குஞ் சரத்தின் மதநதியுங் கங்கா நதியு மெதிர்கொள்ளக்
ககன வெளியுங் கற்பகப்பூங் காடுங் கடந்து கடல்சுருங்க
மடுக்குந் திரைத்தண் டுறைவையை வளநாட் டரசே வருகவே
மலயத் துவசன் பெற்றபெரு வாழ்வே வருக வருகவே.

# தமிழன் மாண்பு

(S. சச்சிதானந்தம்)

உலகிற் பல சமூகங்களுள. சில பண்டு தோன்றின; மிகவும் தொன்மை நாகரிகமும், மாண்பும் எய்திய சமூகங்களுள் தமிழ்ச் சமூகமும் ஒன்றாகும்.

"தமிழன் என்றொரு இனமுண்டு
தனியே அவற்கொரு குணமுண்டு
அமிழ்தம் அவனுடைய மொழியாகும்
அன்பே அவனுடைய வழியாகும்"

என்று எளிய இனிய சில சொற்களாலேயே தமிழன் மாண்பைப்பற்றி அஹிம்சா தர்மத்தைக் கடைப்பிடிக்கும நாமக்கல் திரு. வெ. இராமலிங்கம் பிள்ளை இனிது பாடியிருக்கின்றார்.

தமிழன் மாண்பு பல. அவனது மாண்பு இலக்கியத் துறையில் அன்றும் இன்றும் மங்காது தலைசிறந்து விளங்குகின்றது. இலக்கியமென்பது மக்களது விழுமிய கருத்துக்களைச் சிறந்த சொற்களால் இனிது விளங்க வைக்கும் ஓர் கருவியாம். தமிழ்ச்சங்கங்கள் மூன்று. தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கமென்றே அவை அழைக்கப்பட்டு வந்தன இச் சங்கங்களில் இயற்றப்பட்ட பாடல்களைக் கொண்டு தமிழில் இயல், இசை, நாடகம் என்ற மூன்று கலைகளும இருந்தன என நாம் அறிந்து கொள்ளலாம். இக்கலைச் சிறப்புக்களிலிருந்தே நம் முன்னோர் எவ்வளவு சிறப்பெய்தி யிருந்தார்களென்பது நன்கு தோற்றுகின்ற தன்றோ? இம் மூன்று சங்ககால நூல்களிலும் தமிழனது நீதி, வீரம், காதல், நாகரிகம அறம் முதலிய பலவற்றினது சிறப்பு நன்கு எடுத்து உணர்த்தப்பட்டிருக்கின்றது சுருங்கக்கூறின் அறிவுக் கடலைக் கடைந்தவன் தமிழன் எனலாம். அமிர்தம்போன்ற திருக்குறளையும் அவனே ஆக்கியுள்ளான். நூல்களைப்பற்றிக் கூறின் பெருகும்.

தமிழன் மிகவும் கடவுட்பத்தி நிரம்பியவன். ஏனைய சமுதாயத்தினர் பண்பற்றிருக்கையில் அவன் பண்புற்றிருந்தான். இவ்வுலகில் மனிதன் கடவுளுக்குச் செய்யவேண்டிய கடமைகள் யாதென அவனறிந்து எல்லாம்வல்ல இறைவனைத் தேவாரம், திருவாசகம் முதலியவற்றினால் போற்றினான் என்னே! அக்காலத்திலவனது மாண்பு! தத்துவஞானத்தில் அக்காலத்தில் அவனுக்கு ஒப்பாரும், மிக்காரும் இலரெனலாம். ஆன்மா அழியுந்தன்மை உடையதல்லவென அவன் முன்னரே உணர்ந்து பலவிடங்களிலும "மன்னுயிர்" என்று கூறியது அவனது அறிவின் சிறப்பைக் காட்டுகின்றது.

பிறசமயங்களையும், பிற பாஷைகளையும் அவனது நாட்டிற் பிறர் பரப்பும்பொழுது தமது மதத்திற்கும் தம்மினிய தமிழுக்கும் சிதைவு ஒருபோதும் வரமாட்டாது என்ற துணிவுடன் அவற்றை வரவேற்றவன் தமிழன். பிறநாடுகளிலே பருத்தி பயிரிடுவதற்கு முன்னரேயே அவன் தமிழ்நாட்டில் ஆடைநெய்து வந்தானென்று அறியக்கிடக்கின்றது அன்றியும் அந்நியநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தவனென்றால் அவனது ஆற்றல்தானென்னே! அவன் தனது வியாபாரத்தைத் தரைமார்க்கமாத்திரத்துடன் விட்டானா பார்ப்போம். இல்லை! இன்று ஆங்கிலேயர் கடலை ஆளுவதுபோலவே அன்று அவன் கடலையாட்சிசெய்து வந்தான். யவனர் என்னும் ஒருசாதியாருடன் தான் முதன்முதல் அவன் கடல்வாணிகம் செய்தானென்றும் அறிகின்றோம். கலங்கரை விளக்கங்கள் அவனது நாட்டிலுள்ள துறைமுகங்களில் இருந்தனவென்றால் கடல்வாணிபம்

தொடர்ச்சி 4 ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKSA PRESS

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், சர்வசித்துஞூ
பங்குனிமீ ௧௦உ செவ்வாய்க்கிழமை

## மகோற்சவங்கள்

இவ்வியாழ்ப்பாணப் பெரும் பிரிவிலும் இலங்கையின் ஏனைய பாகங்களிலுமுள்ள சைவக்கோயில்களிற் கொடியேறித் திருவிழா நடக்குங் காலம், பெரும்பான்மையும் இந்தப் பங்குனி மாசந்தொடக்கம் அடுத்துவரும் புரட்டாதிமாசம வரையிலாகும்; இம்மகோற்சவ காலங்களிலே இந்நாட்டி லுள்ள சிலவினுஞ் சில கோயில்களிலொழிய ஏனைய பல கோயில்களி லெல்லாம் அகால உற்சவம் தாசியர் நடனம் வாணவேடிக்கை யென்னும் பொருந்தாக் கருமங்களும் வீண் கருமமும் இன்றும் நடைபெற்றே வரலாயின; பெருந் திருவிழாக் காலத்தில் இங்குள்ள கோயில்கள் சிலவற்றில் நேரும் அநர்த்தங்கள் இன்னுஞ்சிலவுள. இவைகளை யெல்லாம் அறவே தவிர்த்து மகோற்சவத்தை ஆகமவிதிப்படி கிரமமாகநடத்த வேண்டு மென இப் பத்திரிகையில் ஓலமிடாத ஆண்டில்லை யெனலாம்.

இங்ஙனம் இடையீடின்றி ஓலமிடுவதனால், சிற்சில கோயில்களில் இப்படியான அக்கிரமங்கள் ஒவ்வொன்ருய்த் தவிர்க்கப்பட்டு வருதலை யறிதல் மனசிற்கு ஒரு அளவிற்கு ஆறுதலைத் தருகின்றதென்பது நிசம்; சிற்சில கிராமங்களி லுள்ள சைவ இளைஞர் சங்கத்தினர் சில "சில்லறைக்" கோயிலில் மிருகபலி யிடுதல், பல கோயில்களிலே தாசியர் நடனஞ் செய்தல் முதலிய தீமைகளை யெல்லாந் தங்கள் இடையரு முயற்சியினல்இயன்ற வரையிற்தவிர்த்து வருகிருர்கள். கோயி லதிகாரிக ளென்றிருப்பவர்களும் உற்சவ ஆசாரியரும் உபயஞ் செய்வோரும் இப்படியான சைவஇளைஞர் சங்கத்தினருடன் ஒத்துழைத்தால் ஆலயங்களிலே நேர்ந்துவரும் இக்கெடுதிக ளெல்லாம் அறவே யொழிந்துவிடும்; குறித்த முப்பகுதியாருக்கும் இத்தீமைகள் நிகழவொட்டாது தடுக்கும்படி பன்முறை யெடுத்துக் காட்டினும் அவர்கள் கேட்டுங் கேளார் போலவும், அறிந்தும் அறியார் போலவும் வாளா விருக்கின்றனர்; காரணம் இவர்களிடத்திற் கல்வியறி வொழுக்கம் கடவுட்பத்தி யென்னு மிவைக ளில்லாமை போலும்.

உற்சவம் செய்விக்கும் உபயக்காரருட் சில ரொழிய, பலர் குளிக்கப் போய்ச் சேற்றைப் பூசிக்கொள்வார் போல, சிவகைங்கரியஞ் செய்ய வென த் தொடங்கி அக்கிரயச் செயலைச் செய்யவும் செய்வோர்க்குஉதவி புரியவுந் தலைப்பட்டுக் கொண்டார்கள். வடமராட்சியிலே ஒரு கோவிலில் தாசியர் நடனங் காரணமாக நேர்ந்த பிணக்கில் ஒரு பகுதியார், கலகம் நேர்ந்தால் துப்பாக்கிப் பிரயோகமுஞ் செய்யத் துணிந்து நின்ருர்களாம்; இது நிசமானல் இவர்கள் செய்விக்கும் திருவிழா, தக்கன் செய்யத் துணிந்த யாகம் போல வல்லவா முடியும்! தூய்மையான சைவக் கோயில்களிலே இப்படிப்பல ஆபாசங்களோடு திருவிழாச் செய்யத் தலைப்படுதலைக் காட்டிலும் அறவே திருவிழா இல்லா தொழிதல் பன்மடங்கு புண்ணியமாகு மல்லவா?

ஆலயங்களிலேசெய்யத்தகாத அக்கிரமங்கள் இக் காலத்திலே செய்யப்படுதலினற்ருன் விபரீதமான சில கருமங்களைச் செய்ய வேண்டு மென இக் காலத்திலுள்ளார் சிலர் பிரவேசிக்கிருர்கள்; ஆலயங்களிலே அதிகாரிகள் அர்ச்சகர் உற்சவாசிரியர் உபயக்கார ரென்னு மிவர்கள் திருந்தி நடக்கப் பின்னிற்பரேல், ஆங்காங்குள்ள சைவ வாலிப சங்கத்தினரும் வழிபடுவோராகிய கிராமவாசிகளும அவ்வக் கோயில்களுக்குச் சென்று கருமங்களைச் சீர்திருத்தி முறையாக நடக்கச் செய்தல் வேண்டும். உற்சவ காலங்களிலும் சிவபத்தி யொழுக்கங்களிற் சிறந்த பெரியாரை யழைத்து நல்ல பிரசங்கங்களைச் செய்வித்தல்வேண்டும்; அப்படியான ஓதுவார்களைத் தருவித்துத் தேவார திருவாசகங்கள் முதலாம் அருட்பாக்களை ஓதச்செய்தல் வேண்டும். அன்பர்கள் கூடிச் சிவநாமஞ் சொல்லச் செய்தல் வேண்டும்; இன்னும் இப்படியான பல புண்ணியச் செயல்கள் விசேஷ காலங்களிலும் உற்சவ காலங்களிலும் கோயில்களிலே செய்யத்தக்கனவுள; இங்ஙனஞ் செய்யிற்ருன் காலமழை பெய்யும்; நாட்டில் நன்மை யுண்டாகும்.

## ஹைதரபாத்தும் இலங்கையும்

### உடன்படிக்கை வதந்திக்கு மறுப்பு

இலங்கையின் ரப்பரையும் தேயிலையையும் கொடுத்து, ஹைதராபாத்திடமிருந்து நிலக்கரி, கடலைக் கொட்டை முதலான சாமான்களை வாங்கிக்கொள்ள இரு நாடுகளுக்குமிடையில். ஒரு உடன்படிக்கை ஏற்படலாமென்ற வதந்தி உலவுவதை டெல்கியிலிருக்கும் இலங்கை அரசாங்கப் பிரதிநிதியான ஸ்ரீ டி சில்வா மறுத்திருக்கிருர். அவர் கூறுவதாவது:—

அண்ணுமலைச் சர்வகலாசாலையிலுள்ள இலங்கைமாணவர்களின் அழைப்பிற்கிணங்க அங்குசென்றுவிட்டு டில்லிக்குத் திரும்பும் வழியிலேயே நான் ஹைதராபாத்திக்குச் சேன்று அதன் பிரதமருடன் சம்பாஷித்தேன். இந்தச் சம்பாஷணையின் பொழுது விசேஷமாக நாங்கள் எதுவும் பேசவில்லை ஹைதராபாத்தின் அரசியல் நிலைமை தெளிவாகும்வரை அதனுடன் நடத்தும் எவ்விதப் பேச்சுகளையும் இந்திய அரசாங்கம் மூலமாகவே நாங்கள் நடத்துவோம்.

---

அல்வாய் மேற்கைச் சேர்ந்த சின்னத்தம்பி குமாரசுவாமி என்பவர் கணபதிப்பிள்ளை என்பவர்வீட்டிலிருந்து ஓர்கடிகாரத்தைக் களவாண்ட குற்றத்தின்பேரில பருத்தித்துறை நீதிபதியால் 6 மாதக்கடுங்காவற் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டார்.

# தேசீயத் தமிழர் மகாநாடு

## நிறைவேறிய தீர்மானங்கள்

**சென்ற சனிக்கிழமை கொழும்பு அல்பேர்ட் கிறெசென்றில் அகில இலங்கைத் தேசீயத் தமிழர் மகாநாட்டின் அங்குரார்ப்பணக் கூட்டம் நிகழ்ந்தது**

தலைவர்களையும், பிரதிநிதிகளையும் வரவேற்று, வரவேற்புச்சபைத்தலைவர் ஸ்ரீ கே. நேசையா பின்வருமாறு பேசினர்:—

"தனிப்பட்ட வகுப்பு நலனைக் கோராமல் தேசத்தின் பொதுநலனைக் கருதும்படி நாம் விடுவிக்கும் வேண்டுகோளை மற்ற வகுப்பார்களும் சிரத்தையுடன் கேட்பார்கள். இம்மகாநாடு ஒரு நல்ல தருணத்தில் கூட்டப்பட்டிருக்கிறது. உலகெங்கும் ஆபத்தும், இருளும் சூழ்ந்திருக்க ஆசியா விழித்துக்கொண்டு இந்தியா காட்டும் தருமநெறியில் முன்னேறுகின்றது. உலக சரித்திரத்தில் ஒரு புதிய சகாப்தம் ஆரம்பமாகியிருக்கின்றது இலங்கையரான நாமும் ஒன்றுசேர்ந்து ஒற்றுமையோடு உழைத்தால் இம்முன்னேற்றத்தின் முன்னணியில் நாமும் நிற்கலாம். வகுப்புவாத அடிப்படையிலுள்ள எல்லா ஸ்தாபனங்களும் கலைந்துவிடுவதென்று தீர்மானிக்குமாயின் அதைவிட நாட்டுக்கு மகிழ்ச்சியளிக்கக்கூடியது வேறு ஒன்றுமில்லை. நமது அரசியல்வாழ்வும், அரசியல்கட்சிகளும் வகுப்பு வேற்றுமைகளைக் கொண்டல்லாமல் கருத்து வேற்றுமைகளைக்கொண்டு அமையவேண்டும். நாட்டின் தேசியக்கொடி குறிப்பிட்ட ஒரு வகுப்பைத் திருப்திப்படுத்துவதாயில்லாமல அனைவருடைய பக்திக்கும் பாத்திரமானதாயிருக்கவேண்டும்."

பொருளாதாரத்துறையில் உற்பத்தி சாதனங்கள் பொதுவுடமையாக்குவதினல்மட்டும் பலன் ஏற்பட்டுவிடாது. உற்பத்தியைப் பெருக்குவதிலேயே எல்லோரும் கவனம் செலுத்தவேண்டும், நமது சமூகத்துறையிலும், ஆத்மார்த்தத் துறையிலும புரட்சியை ஏற்படுத்தவேண்டும. நாம் முன்பு அடிமைப்பட்ட காரணம் ஆத்மீகவாழ்வில் நாம் வீழ்ச்சியுற்றதுதான். இனிமேலாவது நம் வாழ்வு நல்லொழுக்கத்தை அடிப்படையாகக் கொண்டதாயிருக்கவேண்டும்.

இதன்பின் மகாநாட்டுத்தலைவர் ஸ்ரீ எஸ். சோமசுந்தரம் மகாத்மா காந்தியின் மரணத்திற்கு அனுதாபம் தெரிவிப்பதற்காக சபையோர்கள் இரண்டுநிமிடம் எழுந்து நின்று மௌனம் அனுஷ்டிக்குமாறு கேட்டுக்கொண்டார். அவ்விதம் செய்தபின் அவர் தமது தலைமைப்பிரசங்கத்தை நிகழ்த்தினர். அவர் கூறியதாவது:—

"இலங்கை சுதந்தரமடைந்துவிட்டது. மதவேற்றுமைகளும், ஜாதி வேற்றுமைகளுமில்லாமல் எல்லோரும் இலங்கையரென்ற உணர்வுடன் தேச சேவை புரிந்தால்தான் நாம் பெற்ற சுதந்தரம் பலன் கொடுக்க முடியும். அடிமை இலங்கையிலே வகுப்புவாதம் நிலவக் காரணமிருந்தது. ஆனல் இப்பொழுது நாம் சுதந்தரமக்களாகிவிட்டோம், சுதந்தர இலங்கையில் வகுப்புவாதத்திற்கு இடமில்லை தாய்நாட்டின் க்ஷேமத்துக்காக பெரும்பான்மை வகுப்பினருடன் நாம் ஒத்துழைக்கவேண்டும்.

இதன்பின் தீர்மானங்கள் பிரரேபித்து விவாதிக்கப்பட்டன ஐக்கிய இலங்கைக்குப் பாடுபடுவது, ஒரே மத்திய அரசாங்கமிருப்பதை ஆதரிப்பது, வகுப்பு ஒற்றுமைக்குப் பாடுபடுவது, சோஷலிஸ்டு ஜனநாயகத்தை ஸ்தாபிக்க முயற்சிப்பது முதலான இலட்சியங்களுக்காக அகில இலங்கைத்தேசீயத்தமிழர் சங்கம் என்ற பெயருடன் ஒரு சங்கத்தை நிறுவுவதாக ஸ்ரீ. ஆர். என். சிவப்பிரகாசம் ஒரு தீர்மானத்தைப் பிரேரபித்து ஸ்ரீ. வ ஈ தம்பரினல் ஆமோதிக்கப்பட்டு நிறைவேறியது. அதை ஸ்ரீ ஸி. ரகுநாதன் ஆதரித்துப் பேசினர்.

சமூகப்பொருளாதார அரசியல் நீதிகளை அடிப்படையாகக் கொண்டு ஒரே இயல்புள்ள குடியாட்சி அரசியலை இலட்சியமாகக் கொள்ள மகாநாடு தீர்மானித்தது சகல வகுப்பாருக்கும் சம உரிமைகளும் சந்தர்ப்பங்களும் இருக்க வேண்டுமென்றும வகுப்பு வேற்றுமைகளை அடிப்படையாக கொண்டல்லாமல் அரசியல பொருளாதார வேற்றுமைகளை அடிப்படையாகக் கொண்ட தேசியக்கட்சிகளைய ஆதரிப்பரென்றும் மகாநாட்டில் வேறுபல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன

இதன்பின் புதிய சங்கத்தின் அமைப்புத் திட்டங்கள் ஏகமனதாக ஆமோதிக்கப்பட்டன.

மத்தியான உணவு வேளைக்குப்பின் மகாநாடு பிற்பகலில் கூடிய போது ஸ்ரீ ஸி. நவரத்னம் பனையின் உபயோகங்கள், அதன் வளர்ச்சி முதலியவற்றைப் பற்றி அரசாங்கம் ஆராய்ச்சிகள் நடத்த வேண்டுமென்று ஓர் தீர்மானத்தை பிரரேபித்தார். பனையே யாழ்ப்பாணத்தின் முக்கியப் பொருளென்றும் ஆகவே அது பற்றி அரசாங்கம் ஆராய்ச்சி நடத்துவது அவசியமென்றும் அவரால் வற்புறுத்தப்பட்டது. 'தெங்குப் பொருள், தேயிலை, ரப்பர் ஆகியதொழில்களுக்கென அரசாங்கம் ஆராய்ச்சி ஸ்தாபனங்களை நடத்தும் போது பனையை மட்டும் புறக்கணிப்பதற்குக் காரணமே கிடையாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இத்தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

தேசீயக் கொடியை நிர்ணயிப்பதற்குப் பார்லிமெண்ட் விசேஷச் சபை நிறுவப்பட்டதை வரவேற்றும், தேசீயப் பாஷைகளை அரசாங்க பாஷையாக அனுசரிக்க வேண்டுமென்று வற்புறுத்தியும் தீர்மானங்கள் நிறைவேறின.

தேசீயப் பாஷைகளை ராஜாங்க பாஷையாக அமுல் நடத்துவதற்கு வேண்டிய வழிவகைகளை ஆராய்ந்து சிபார்சு செய்வதற்கு ஒரு சபையும் தெரிவு செய்யப்பட்டது

### புதுவருஷ உத்தியோகஸ்தர்

பின்பு புது வருஷ உத்தியோகஸ்தர் தெரிவு நடைபெற்றது. தலைவராக ஸ்ரீ எஸ். சோமசுந்தரமும், உபதலைவர்களாக டாக்டர் ஸி கந்தையா, ஸ்ரீ எஸ். எச். பேரின்பநாயகம், ஸ்ரீ ஏ. செல்லமுத்து, ஸ்ரீ எஸ். ஆர். கனகநாயகம், ஸ்ரீ ஸி. தனபாலசிங்கம், ஸ்ரீ கே. வி. எம். சுப்ரமண்யம், ஸ்ரீ வி. எம். குருஸ்வாமி, ஸ்ரீ வி. சுப்பையா, ஸ்ரீ வி. ஸி சிவப்பிரகாசம் ஆகியோரும் தெரியப்பட்டனர்.

காரியதரிசுகளாக ஸ்ரீ ஏ. ஸி. செல்லராஜா, ஸ்ரீ ஸி. ரகுநாதன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

நிகழ்ச்சிகளின் முடிவில் ஸ்ரீ ஏ. ஐ. ராஜசிங்கம் நன்றியுரை கூறினர். அதன் பின் ஒரு தேநீர் விருந்து நடைபெற்றது. பார்லிமெண்ட் பிரதிநிதிகள், செனெட்டர்கள் உள்பட பல முக்கியஸ்தர்கள் இதில் கலந்து கொண்டார்கள்.

---

சாவகச்சேரியைச் சேர்ந்த வல்லி சின்னப்பு சட்டவிரோதமாகக் கள் இறக்கியதற்காக சாவகச்சேரி நீதிபதியால் 50ரூபா அபராதம் விதிக்கப்பட்டான்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த உள்நாட்டு மந்திரி

## திரு. ஸி. குமாரசுவாமியா ?

(நமது அரசியல்நிருபர் எழுதுகிறார்)

இலங்கை மந்திரசபை மாற்றியமைக்கப்படுமா? என்பதுதான் இன்று அரசியல் வட்டாரங்களில் விவாதிக்கப்படும் பிரதானகேள்வியாகும். ஏற்கெனவே 14 மந்திரிகளில் இரண்டுபேர் ஸ்தானமிழந்துவிட்டனர், இன்னொருவர்—சேர் ஒலிவர் குணதிலகா – மந்திரிப் பதவியை விட்டு விலகி, இன்னும் இரண்டொருமாத காலத்தில் இலங்கையரசாங்கத்தின் பிரதிநிதியாக லண்டனுக்குச் செல்லவிருக்கிறார். எனவே மந்திரசபையில் 3 ஸ்தானங்கள் காலியாகும்.

ஆரம்பத்தில் மந்திரசபையில் 14 பேர் இருந்தனர். அத்தொகையை ஆக்க, திரு. சேனனாயக்கா இன்னும் மூவரை நியமிப்பாரா? அல்லது 11 பேருடன் மந்திரசபையை வைத்திருக்கப்போகிறாரா? இன்னும் ஓர் சிலரை மந்திரிகளாக நியமிப்பதாயின் திரு. சேனனாயக்கா யாரை நியமிப்பார்?

திரு. சேனனாயக்கா, தம் அரசாங்கத்துக்குப் பலம் தேடுவதற்காக அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசின் ஒத்துழைப்பையும் உதவியையும் நாடி, ஒன்றிரண்டு மந்திரப் பதவிகளைக் காங்கிரஸ்வாதிகளுக்கு வழங்கக்கூடும் என்று ஓர் சாரார் பேசிக்கொள்கின்றனர். இவர்கள் தம் கூற்றுக்கு ஆதாரமாகக் கூறும் காரணங்கள் என்ன?

ஐக்கிய தேசியக் கட்சியின் பலம் வரவரக் குறைகிறது. அக் கட்சிக்குள்ளேயே பிரிவினை தோற்றியிருக்கிறது. இன்னும் சிலகாலத்தில் அதனைச் சேர்ந்த பல அங்கத்தவர்கள் அக்கட்சியைவிட்டு வெளியேறக்கூடிய உற்பாதங்களும் தோற்றுகின்றன. இந்த நிலைமையைச் சமாளித்துத் தம் அரசாங்கத்துக்குப் பலம் தேடவேண்டுமானால், திரு. சேனனாயக்கா, கட்டுப்பாடுள்ள கட்சியான தமிழ்க்காங்கிரஸின் உதவியை நாடவேவேண்டும். இப்படியான நிலைமையை உத்தேசித்து திரு சேனனாயக்கா தமிழ்க்காங்கிரசின் உதவியை நாடுவார் என்று இந்தச் சாரார் கூறுகிறார்கள்.

தமிழ்க் காங்கிரசும் பதவி ஏற்பு விஷயத்தில் மாறுபட்டதல்ல என்றும், இவர்கள் சொல்லிக்கொள்ளுகிறார்கள். இப்போது தமிழ்க் காங்கிரஸ், இடதுசாரிக் கட்சிகளுடன் ஒத்துழைக்கின்றதென்பது உண்மையே. ஆனால் அது உண்மையான ஒத்துழைப்பல்ல. இராஜதந்திரத்தை அடிப்படையாகக் கொண்டது. தமிழ்க் காங்கிரசின் கொள்கைகளுக்கும், இடதுசாரிகளின் கொள்கைகளுக்குமிடையே ஓர்காலத்திலும் ஒற்றுமைஏற்படமாட்டாது. காங்கேசன்துறைத் தொகுதியில் தாம் வெற்றிபெற்றபோது திரு. செல்வநாயகம் இடதுசாரிக் கட்சிக் கொள்கைகளைக் கண்டித்ததை இப்போது சுட்டிக் காட்டப்படுகிறது ஆகவே, தமிழ்மக்களின் "சுயமரியாதைக்குப் பங்கம் விளைக்காத முறையில்" திரு சேனனாயக்கா, தமிழ்க் காங்கிரசின் ஒத்துழைப்பை நாடினால், அந்த ஒத்துழைப்பை ஈந்து மந்திரசபையிலும்பங்குபற்றக் காங்கிரஸ் தயாராம். இவர்களுடையஜோசியம் உண்மையாகுமோ என்பதில் எனக்குப் பெரும் சந்தேகம்.

திரு. சேனனாயக்காவை ஓரளவுக்கு நான் அறிவேன். தமிழ்க் காங்கிரஸ்மீது அவர் 6 மாதத்துக்கு முன் எந்த அபிப்பிராயத்தைக் கொண்டிருந்தாரோ, அந்த அபிப்பிராயத்தை, இராஜ தந்திரத்தின் பொருட்டேனும், இவ்வளவு சீக்கிரத்தில் மாற்றக்கூடிய பேர்வழியல்ல அவர். எது எப்படி நிகழ்ந்தாலும் அவர் தமிழ்க்காங்கிரசின் ஒத்துழைப்பை ஓர்போதும் நாடமாட்டார். அப்படியானால், அவருடைய அரசாங்கம் ஸ்திரமாக இருக்குமா? ஐ. தே. க. அங்கத்தவர்கள் தொகை வரவர அருகி வருகிறது இடதுசாரிகள் தொகை வரவரப் பெருகிவருகிறது. ஆகவே திரு. சேனனாயக்கா எப்படி நிலைமையைச் சமாளிக்கப்போகின்றார்? என்று சிலர் வினவலாம். பாராளுமன்றத்துப் பிரதிநிதிகள் சபையில் செல்லிக்காய் போன்ற எக்கட்சியிலும் சேராத இருபது பேர்வரை இருக்கின்றனர் என்பதை ஓர்சிலர் மறந்துவிடுகிறார்கள். இவர்கள்தான திரு. சேனனாயக்காவுக்குப் பேராதரவாளர், பாராளுமன்றத்தைக் கலைத்துப் புதிய தேர்தல்நடத்தவதற்கு ஆலோசனைகூறப் பிரதமர்க்கு அதிகாரமுண்டு. திரு. சேனனாயக்கா அப்படியான ஆலோசனையைக் "கவர்னர் ஜெனராலுக்கு" சமர்ப்பித்தால, இப்போதுள்ள அரசியலமைப்பில், "கவர்னர் ஜெனரல்" அதனை மீறமாட்டார். இன்னோர் பொதுத்தேர்தல் நிகழ்ந்தால், கட்சிப் பற்றுள்ளவர்கள் ஓர்சமயம் கட்சியின் பெயரால் மீண்டும் வெற்றிபெறலாம். ஆனால் இதுவரை எக்கட்சியிலும் சேராது, திரிசங்கு உலகத்தில்வசிக்கும் சுயேச்சைவாதிகள் கதி என்ன? இந்த இருபது பேரில் இரண்டுபேராவது மீண்டும் வெற்றிபெறுவர் என்பதற்கு என்ன உத்தரவாதம்? அதிமாத்திரமா? எத்தனை ஆயிரம் செலவழிக்கவேண்டும். கட்சிப் பற்றுள்ளவர்கள் தாமும் ஓர் தேர்தல் வந்தால் செலவழிக்க முடியுமா? ஆகவே, சுயேச்சை வாதிகள் வேண்டியபோதெல்லாம், வாய்க்கு வந்தபடி திரு சேனனாயக்காவையும் அவரது அரசாங்கத்தையும் ஏசுவார்கள், திட்டுவார்கள்; ஆனால், பாராளுமன்றத்தைக் கலைத்துப் புதிய தேர்தல் நடத்தப்படும் என்று திரு. சேனனாயக்கா ஓர் வார்த்தை கூறி, "பொதுத்தேர்தல்" என்ற மந்திரத்தைக் கூறுவரேயானால், இந்தச் சுயேச்சைவாதிகளில் அநேகர் பெட்டிக்குள் அடங்கும் பாம்புபோல அடங்கிவிடுவர். இதனைத் திரு. சேனனாயக்கா அறியாமலில்லை, பழைய பெருச்சாளியல்லவா அவர்! சுயேச்சை வாதிகள் பாராளுமன்றத்துப் பிரதிநிதிகள் சபையில் இருக்கும்வரை திரு. சேனனாயக்கா நிம்மதியாகக் காலங்கழிக்கலாம். ஆகவே, அவர் தமிழ்க் காங்கிரசின் ஒத்துழைப்பை ஏன் நாடவேண்டும்?

நீண்ட ஓய்வுக்குப் பின்னர் அடுத்து வரும் மேமாதத்தில் பிரதிநிதிகள் சபை கூடப்போகும் நேரத்திலே திரு. சேனனாயக்கா கட்டாயம் தம் மந்திரசபையை முன் இருந்தபடி விஸ்தரிப்பார் காலிஸ்தானங்களில சேர் ஒலிவர் வகித்துவந்ததுதான் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது இந்த உள்நாட்டு மந்திரப் பதவியை திரு. சேனனாயக்கா யாருக்குவழங்கப்போகிறார்?

சேர். ஒலிவர் நியமனமானதும், இப்போது லண்டனில் இலங்கையரசாங்கத்தின் பிரதிநிதியாயுள்ள திரு. ஜீ. வி. எஸ். கொறியாவை இங்கே அழைத்து, செனேற் சபையில் நியமித்து, பின்னர் உள்நாட்டு மந்திரியாக்கலாம என்றும் கூறப்படுகிறது ஆனால் இது நடைபெறும் கருமமல்ல என்பதே எனது அபிப்பிராயம். திரு. கொறியா நல்ல அநுபவசாலி; உலகம்படித்தவர்; கொழுத்த வேதனம் தரும் உத்தியோகத்தை விடுத்து 1500 ரூபா வேதனமுள்ள மந்திரிப் பதவியைப் பெற்றுக் கேவலம் கட்சிப் பூசலுக்குள் இனியும் அகப்படக்கூடிய பேர்வழியல்ல திரு கொறியா ஆகவே, இப்படியான பதவியை திரு. சேனனாயக்கா வழங்கினாலும். 'பிச்சை வேண்டாம் தாயே நாயைப்பிடி' என்றவன் சீலமாக உதறித்தள்ளிவிடுவார் அவருக்கு அமெரிக்காவில் இலங்கையரசாங்கத்தின் ஸ்தானிகர் உத்தியோகம் காத்துக்கிடக்கிறது. ஆஸ்திரேலியாவில் இலங்கை ஸ்தானிகர் பதவி திரு. மகாதேவாவுக்குத்தான் என்று நிச்சயமாக அறிகிறேன். இப்படியான நிலையில் உள்நாட்டு மந்திரியாக யார் நியமிக்கப்படுவார்?

இப்போது செனேற் சபையில அங்கத்தவராயுள்ள திரு. ஸி. குமாரசுவாமி அவர்களுக்கு உள்நாட்டு மந்திரிப் பதவி வழங்கப்பட்டால் நான் ஆச்சரியப்படமாட்டேன். இப்போதுள்ள நிலையில், அவரே அப்பதவிக்கு நியமிக்கப்படுவர் என்று ஓரளவுக்கு நான் நிச்சயமாகக் கூறமுடியும். திரு. குமாரசுவாமி, நீண்ட காலமாக சிவில்சேர்விஸ் உத்தியோகத்தராகக் கடமையாற்றி, அரசாங்கவிஷயங்களின் நுட்பங்களை நன்கு அறிந்தவர். அவர் வகித்த உத்தியோகங்கள் அநேகமாக உள்நாட்டுமந்திரியின் நிருவாகத்தில் உள்ளன. அரசியல் விஷயத்திலும் திரு. குமாரசுவாமி ஐக்கியதேசியக் கட்சியில் அநுதாபம் கொண்டவர். சகல விஷயங்களையும் தீர் [illegible] தான் அடுத்த உள்நாட்டு மந்திரியாவார் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

# சுவாமி ராமதாசர் தோத்திரம்

விருத்தம

அன்பினே டிராமநாமம் அனுதின மனுசந் திப்போர்
இன்பவீ டடைதல்திண்ணம் இதில்ஐயங் கொள்ளீ ரென்று
தன்பெரும் அநுபவத்தால் தரணியோர்க் கெடுத்துக் காட்டும்
மன்புகழ் ராமதாசர் மலரடி சிரமேற் கொள்வாம்.

முன்னொருநாள் மன்னவனுஞ் சிவாஜி கோரும்
முழுவரமு முவந்தளித்த முத்தன் கண்டாய்
பன்னெடுங்கால் கன்னடஞ்செய் பாக்கியத்தால்
பத்தனாய் வந்துதித்த வித்தல் கண்டாய்
அன்னையாங் கிருஷ்ணபா யார்வந்திர
ஆனந் தாஸ்ரமமது அமைத்தான் கண்டாய்
தங்கையடை யன்பர்க்குத் தாயாய் ராம
தாசனெனத் தனையழைக்குந் தந்தை தானே.

அன்னை கிருஷ்ணபாய் தோத்திரம்

மாயையெனுந் திரையையறுத் துண்மை காண
மனங்கொண்டு அங்குமிங்கும் ஓடிவாடி
ஓயாத கவலையிலே யுன்னை நாடி
உனதடிகள் சார்ந்ததுமே உறுதிகூறி
'தாயே'! யென் றடியர்குழாந் தாழும்வேளை
தானாக வந்தெனையாள் கிருஷ்ணபாயே
வாயார நின்புகழே வாழ்த்துகின்ற
வரமெனக்கு உவந்தளித்தால் போதுமம்மா!

ஒருமொழியும் பேசாது உய்யுநெறி எனக்களித்த
பெருந்தவமே உருவமதாம் பெட்புடைய பெருமாட்டி!
இருவினையின் வேரறுத்து இன்னுமோர் மாதாவின்
கருவரையிற் புகாவண்ணங் காத்தருள்வ துன்கடனே.

வாழ்த்து

அன்புருவா யெமையாண்ட அருள்ராம தாசகுரு அடிகள் வாழி
அன்புருவா யமைந்ததிருக் கிருஷ்ணபாய் அடியிணையெந்நாளும் வாழி
அன்புருவாங் குருபதத்தை அகலாமல் அடியார்குழு என்றும் வாழி
அன்புடனே ஆனந்தம் அணைந்துமிளிர் ஆஸ்ரமம் வாழி வாழி,

க. இ.

# நாவலர் பெருமான் சரிதை

## யோகி சுத்தானந்தர் முயற்சி

...... ஸ்ரீதரன் ......

புதுச்சேரியிலே ஸ்ரீ அரவிந்தாஸ்ரமத்தில் தவமியற்றும்ஸ்ரீசுத்தானந்தபாரதியாரின் நாவலர் சரித்திரம் விரைவில் வெளிவரும் என அன்பர் திரு. க. இராமச்சந்திரன் அவர்கள் தெரிவிக்கிறார்.

ஸ்ரீ அரவிந்தாஸ்ரமத்தில் இப்போது ஓர் புதிய அச்சியந்திரம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இந்த யந்திரம் இந்தியாவிலேயே சிறந்ததெனச் சொல்லப்படுகிறது. இதிலேயே நாவலர்பெருமான சரிதை அச்சிட்டு வெளியிடப்படும்

நாவலர்பெருமானின் சரிதை தமிழில் மாத்திரமன்றி, பிரான்சிய பாஷையிலும் வெளிவரும் என்று தெரிகிறது. ஆஸ்ரமத்து அன்னையார் (ஓர் பிரான்சியப் பெண்மணி) இவ்விஷயத்தில் மிகவும் ஊக்கம் எடுத்துவருகிறார் கூடிய சீக்கிரத்தில் தமிழ்ப்பதிப்பும், பிரான்சியப்பதிப்பும் வெளிவரவேண்டுமென்பதே அன்னையின் ஆசை. எங்கள் நாவலர் பிறந்ததெங்கே? வளர்ந்ததெங்கே? அவரின பெருமையை நாம் அறிந்து, உணர்ந்து ஆகவேண்டிய சத்கருமங்களை இன்னும் செய்யவில்லை; ஆனால், குளத்தில் உள்ள தாமரையின் தேனை அங்குள்ள தவளைகள் அநுபவிக்காதிருப்ப, தூரதிருக்கும வண்டுகள் வந்து அதனைப்பெற்றுத் தாமும் அநுபவித்து, உலகமக்களுக்கு உணவாகவும், மருந்து அநுபானமாகவும் உதவுகின்றன.

எங்கள் நாவலப்பெருமான் இன்னோர் நாட்டிற் பிறந்து அந்நாட்டு மக்களுக்குத் தன்னை ஒறுத்துச் சேவை செய்திருப்பாரேயானால், இன்று அவருடைய தங்கச்சிலை அந்நாட்டின் மணியாசனத்திலே வைக்கப்பட்டிருக்கும்.

நாவலர் ஒருவர் பிறந்திலரேல் எம் சைவத்தின் கதி என்னாகியிருக்கும். தமிழின்கதி என்னாகியிருக்கும். இன்று இலங்கையிலே சுயராஜ்யம வந்துவிட்டதாம்! கத்தியின்றி ரத்தமின்றி வந்த இந்தச் சுயராஜ்யத்துக்கு விதை இட்டவர் யார்?

அக்காலத்திலே பாதிரிமார் எதற்காக இந்த இலங்கைக்கு வந்தனர்? "அஞ்ஞானிகளை" மோட்சவீட்டுக்கு அனுப்பவல்ல: இங்குள்ள ஏழைகளை ரட்சிக்கவல்ல. அப்படியான பரந்தநோக்கம் அவர்களுக்கு உண்மையிலே இருந்திருக்குமானால், அந்த சிவகாருண்ய சேவையின் பொருட்டு கடல்கடந்து இங்கே வரத் தேவையில்லை. இந்தப்பாதிரிமார் பிறந்து வளர்ந்த ஊர்களிலேயே சமயத்தைவிளங்காது, நித்தியதரித்திரத்தில் ஆழ்ந்துழலும் அநந்தம்பேர் இருந்திருக்கின்றனர். அவர்களை எல்லாம் மீட்க வகையறியாது இங்கே இப்பாதிரிமார் வந்த நோக்கம் தம் சாகியத்தாரின் அரசியலாதிக்கத்தை இங்கே பலப்படுத்தவே. வேட்டையாளியானது தன் வயப்பட்ட பூச்சிகளைத் தன்மயமாக்குவதுபோல, இப்பாதிரிமாரும் தம்மதத்திற் சேர்ந்தவர்களை மேனாட்டு நாகரீக மயக்கத்திற் களாக்கி, வெள்ளைக்காரரின் தாஸர்களாக்கினர். இப்படி மயங்கியவர்களே, கடைசியில் அந்த ஏகாதிபத்தியங்களின் தூண்களாக விளங்கினர். இவர்களின் துணையைக்கொண்டே ஓர் சில வெள்ளையர் லட்சக்கணக்கான சுதேசிகளை அடக்கியாண்டனர். இந்த உண்மையை இலங்கையிலே முதன்முதல் உணர்ந்து பாதிரிமார் கொட்டத்தை யடக்கி, ஏகாதிபத்தியத்தூணை முதன் முதலாக அசையச்செய்து வீராழக்கம் செய்த புருஷோத்தமன் எங்கள் யாழ்ப்பாணத்து ஆறுமுகநாவலப்பெருமான் அன்றி வேறு யார்? அவர் காட்டிய வழியைத்தான் சேர். பொன் இராமநாதனும், சேர். பொன் அருணாசலமும் கடைப்பிடித்தனர். இந்த இரு புருஷர்களாலும் இலங்கையிலே ஓர் புதிய உணர்ச்சி தோன்றியது. தேசீயக் கலாசாலைகள் உண்டாகின. இலங்கைத் தேசீயக்காங்கிரஸ் உண்டாயது. மக்கள் சுதந்திரதாகம் கொண்டனர். இன்று நாம் சுதந்திரம் அநுபவிக்கிறோம். இவற்றுக்கெல்லாம் மூலபுருஷன் எங்கள் நாவலப்பெருமான்தான் என்பதை நாம் உணராதிருப்பது எவ்வளவு துக்கத்துக்கிடமான விஷயம்.

யோகி சுத்தானந்தர் முயற்சி இனிதே நிறைவேறுமாக; நாவலர்மணம் எங்கும் வீசுவதாக! வாழ்க நாவலர் நாமம்! வாழ்க யோகி சுத்தானந்தர்!

---

ஹோரணைப்பகுதியில் லபுகமஎன்னுமிடத்திலே டி. சி. அத்துக்கோரளை என்னும் பெண் ஓர்பிரசவத்தில் மூன்று சிசுக்களை ஈன்றிருக்கிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உம்மிடத்திலுள்ள ரேடியோவில்:—

1. சத்தத் தெளிவில்லாமை
2. சத்தக் குறைவு
3. ஒலித் தொகுப்பில்லாமை
4. அதிக இரைச்சல்
5. சிதைவான ஒலியுடன் கேட்டல்

முதலிய பிழைகளிருந்தால், தயவுசெய்து

**M|s கிளைவ் & கொம்பனி**

(M. S. Clive & Co)

(Engineers) என்ஜினியர்ஸ்

**139, கடற்கரைத்தெரு, யாழ்ப்பாணம்**

என்ற விலாசத்திலுள்ள எங்கள் நிலையத்திற்கு உடனே கொண்டு வாருங்கள். வீடுகளுக்கு மின்சாரக் கம்பியமைத்தல் முதலிய மின்சாரசம்பந்தமானஎல்லாவேலைகளும் செய்பச்சித்தமாயிருக்கிறோம்.

( Std 44 23-3—23-4-48)



## வெளிவந்துவிட்டன!

திரு. வே. சிவக்கொழுந்து அவர்களியற்றிய புதியபாடத் திட்ட

**நாலாந்தரக் கணிதம்**

விலை ரூபா 1—35

**ஐந்தாந்தரக் கணிதம்**

விலை ரூபா 1—75

சிறந்த விளக்கமுறைகள்! நிரம்பிய மனக்கணிதப் பயிற்சிகள்!

தெளிவான அப்பியாசங்கள் கொண்டுள்ளன

இரண்டாம், மூன்றும், ஆருந்தரக் கணிதங்களும் மனக்கணிதங்களும் (அச்சில்)

PUBLISHERS:

**THE NORTH CEYLON BOOK DEPOT**

POINT PEDRO

Std40 27 2-48 — 26-3 48


## தமிழன் மாண்பு

முதலாம் பக்கத் தொடர்ச்சி

எவ்வளவு செய்திருக்கின்ருனென்பது தெரிகின்றதன்றோ?

இவற்றுடன் மாத்திரமா நின்ருன் தமிழன்? அறிவும் ஆற்றலும் உடைய பெண்களுக்கு அரசசபைகளிலே பதவிகள் கொடுத்தான். ஆனுல், இப்பொழுது பெண்களுக்குச் சமவுரிமை கொடுக்கலாமாவெனச் சிலர் ஆலோசிக்கும்பொழுது தமிழனது இச்செயல் அவன் அக்காலத்தில் எவ்வளது சீர்திருத்தமுற்றிருந்தானென்று வெளிப்படுகின்றதல்லவா? தம்நாட்டுப் பெண்மணிகளுக்குக்கூட வீரமூட்டிப் பல வீரச் செயல்களைப் புரிவித்திருக்கின்ருன்.

அவன் தன் நாட்டிலே மணத்தை எட்டுவிதமாகப் பிரிவுசெய்து வைத்தான். அவற்றினுட் சிறந்தது காதல் மணமேயாம். முற்காலத்திலே தமிழ்நாட்டு மணங்களிற் பெரும்பகுதி காதல்மணமேதான். தலைவன் ஒருவன் தான்விரும்பிய தலைவியைத் தானே நேரிற்கண்டு தம் இருவர் இதயங்களையும் ஒன்ருக்கிக் காந்தர்வ மணம் புரிந்துவாழும் வாழ்க்கைக்கு இவ்வுலகில் எதை யொப்பிடலாம்? அத்துடன் காதல் மணத்தால் கற்பு தன்னிலை முன்னர் பெற்றிருந்தது. மணம்புரிந்த கணவனை அல்லது மனைவியை இன்றையஉலகில் விவாகரத்துச் செய்யும் அநாகரிகவழக்கம் முன் ஒருபோதும் இருக்கவில்லை. ஒவ்வொருமாதும் கற்புக்கு நிலைக்களனக இருந்தாளெனவே கூறவேண்டியிருக்கின்றது.

சில நூற்ருண்டுகள் கழிந்தபின் ஆரியர் தமிழ்நாட்டிற்கு வந்தனர். அவர்களது வருகையின்பின தமிழனது மாண்பு பெருகாது குன்றிக்கொண்டே வந்தது.

தமிழனது மாண்பு மிகச் சிறப்புடையது. அந்நிய மதத்தினராலும் பிற சாதியினராலுமே இப்பொழுது சில அநாகரிக வழக்கங்களைத் தமிழன் கையாளுகின்ருன். அவை யனைத்தையும் அறவே நீக்கி முன்போலவே எத்துறையிலும் முன்னேறி மாண்புற்றுத் தமிழன் வாழவேண்டும்.


உங்கள் வியாபாரம் விருத்தியுற வேண்டுமா?

•

அப்படியானல்

•

**இந்துசாதனத்தில் விளம்பரஞ் செய்யுங்கள்**


## திருச்சி ரேடியோ

புதன் மார்ச் 24

காலை 7 15 ஆரம்பம் இசைத்தட்டு 7 20 தமிழில் செய்திகள் 7 30 பி சொக்கலிங்கம் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 திருவெண்காடு சுப்ரமணியபிள்ளை நாகஸ்வரம் 8 30 கருப்ரா கே தங்கப்பாச்சாரி பாட்டு 9 முடிவு

1 கதம்பம் இசைத்தட்டு 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 பி சொக்கலிங்கம் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 கருப்ரா கே தங்கப்பாச்சாரி பாட்டு 2 15 கல்வி ஒலிபரப்பு 2 45 முடிவு

மாலை 5 வாளாடி எம் ருக்மிணி புல்லாங்குழல் 5 40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 வாளாடி எம் ருக்மிணி புல்லாங்குழல் 7 30 தமிழில் செய்திகள் 7 45 புதிய வெளியீடுகள் 8 பெருங்கதை 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 குரலவகை இசைத்தட்டு 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9 45 ஆர நடராசன் 10 இசைவேளை இசைத்தட்டு 10 30 முடிவு

வியாழன் மார்ச் 25

காலை 7 15 ஆரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7 30 வி எஸ் சீதாராமன் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 காலை இசை 8 30 பட்டமங்கலம் சாம்பசிவ ஐயர் வீணை 9 முடிவு

1 கதம்பம 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 பெண்ணுலகம் 2 தமிழில் செய்திகள் 2 05 பரிகாசப் பாட்டுகள் 2 15 கல்வி ஒலிபரப்பு 2 45 முடிவு.

மாலை 5 என் ஜி சீதாராமய்யர் பாட்டு 5 40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 பி யு சின்னப்பா இசைத்தட்டு 7 15 செய்தி விளக்கம் 7 30 தமிழில் செய்திகள் 7 45 என் ஜி சீதாராமஐயர் பாட்டு 8 15 மதராஸிலுள்ளபடி 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 ராமலிங்க சுவாமி பாடல்கள் இசைத்தட்டு 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9 45 பட்டமங்கலம் சாம்பசிவ ஐயர் வீணை 10 30 முடிவு.

வெள்ளி மார்ச் 26

காலை 7 15 ஆரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7 30 கோட்டையூர் ஏ என வி டி அண்ணாமலை பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 திருத்தி வாத்ய கோஷ்டி 8 30 பி வி கணேச ஐயர், கே ராமையா பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் இசைத்தட்டு 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 கோட்டையூர் ஏ என் வி டி அண்ணாமலை பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 கோட்டையூர் ஏ என் வி அண்ணாமலை பாட்டு 2 15 கல்வி ஒலிபரப்பு 2 45 முடிவு.

மாலை 5 தேவாராதனை ஶ்ரீமன்கத்தோவிக்க 5 30 மைசூர் டி சௌடையா வயலின் 5 40 குரான்-ஷரீப் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 கும்பகோணம் வி சிவசுப்ரமணியபிள்ளை சகோதரர்கள் நாகஸ்வரம் 7 30 தமிழில் செய்திகள் 7 45 நமது தபால்பெட்டி 8 பி வி கணேசய்யர், கே ராமையா பாட்டு 8-30 கும்பகோணம் வி சிவசுப்ரமணியபிள்ளை சகோதரர்கள் நாகஸ்வரம் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 வண்டும் மலரும் இசைநிகழ்ச்சி 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை ஆங்கிலம் 9 45 டி வி கிருஷ்ணமூர்த்தி பாட்டு 10 நீங்கள் கேட்டவை 10 30 முடிவு.

## அறிவித்தல்

### இரு மோட்டோர் லொறிகள் விற்பனவு

1948-ம் ஆண்டு ஏப்பிறில்மீ 3-ந்திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் யாழ்ப்பாண நகரசபைக் காரியாலயத்தில், நகரசபைக் குரிய இரு மோட்டார் லொறிகள் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

மோட்டோர் லொறிகள் வாங்குவதற்கு உத்தரவுப் பத்திரங்கள் தேவையில்லை

மேற்படி லொறிகளை நகரசபைக் காரியாலயத்திற் குரிய வேலை ஸ்தலத்தில் பார்வையிடலாம்.

க, பொன்னம்பலம்,
யாழ்ப்பாண நகரசபைத் தலைவர்.

யாழ்ப்பாணம், [illegible]
Mis. [illegible], 23—30-3-48.

## விளம்பரம்

### யாழ்ப்பாணப் பட்டினசங்கம்

பின்வரும் வேலைகளுக்காக ஒப்பந்த விகித அட்டவணை தரும்படி கேட்கப்படுகிறது, குறித்த ஒப்பந்த அட்டவணைகள் வருகிற ஏப்பிரல்மீ 3உ, சனிக்கிழமை மத்தியானம் 12 மணிக்குப் பிந்தாமல் இக்காரியாலயத்திற்கு (ஆபீஸிற்கு) அனுப்பப்படல் வேண்டும்; இன்னுந் தேவையான விபரங்களும் இக்காரியாலயத்திற் பெற்றுகொள்ளலாம்.

வேலைகளின் விபரம்:

1. கொட்டடித் தெருவிலுள்ள நெடுங்குள வாய்க்கால் மேல் இப்பொழுதுள்ள மரப்பாலத்தைத் தவிர்த்து, 'கொங்கிறீற்' பாலமாக அமைத்தல்.
2. அராலித் தெருவி லுள்ள மரப்பாலத்தைத் தவிர்த்து, 'கொங்கிறீற்' பாலமாக அமைத்தல்.
3. சோமசுந்தரம் ஒழுங்கையில் மண் வேலை செய்தல்.
4. கோயில் வட்டாரத்திலுள்ள வண்ணன் குளத்திற்குச் சமீபமாக ஒருகிணறு தோண்டுதல்.

C. பொன்னம்பலம்
பட்டினசங்கத் தலைவர்.

பட்டினசங்கக் காரியாலயம்,
யாழ்ப்பாணம், மார்ச்மீ 15உ 1948.
Mis. 266, 23-3-48.

## கீரிமலைக் காணிகள் ஏலவிற்பனவு விளம்பரம்

கீரிமலை புண்ணிய ஸ்தலங்களுக்கும், காங்கேசன் துறை சீமேந்துச்சாலைக்குமிடையிலும், மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலடியிலிருந்து கீரிமலைக்குப் போகும் றோட்டுக்குத் தெற்குப் பக்கமாக இருக்கும் கீழே விபரிக்கப்படும் ஆதனம், உலாந்தாமேஸ்தர் மானிப்பாய் எஸ். முத்துக்குமாரசாமியால் 1948-ம் ஆண்டு மாசி மாதம் 6-ந் திகதி 3/1948-ம் இலக்கத்தில் விஸ்தாரிக்கப்பட்ட படத்தின்படி 10 துண்டுக் காணிகளாகப் பிரிக்கப்பட்டது. இதில் முதல் 8 துண்டுக் காணிகளும் சொந்தக்காரரின் கேள்விப்படி 1948-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 27-ந் திகதி (27.3.48) சனிக்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் அந்தந்தத் துண்டுக் காணிகளுக்குள்நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காணியின் விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி தெல்லிப்பழை கோவிற்பற்று மாவிட்டபுர மிறையும், தெல்லிப்பழை மேற்கிறையும் "திருதம்பலையும், யாம்புராயும்" நிலப்பரப்பு 117-ம் குளி 9-ம் கிணறும் மற்றும் பயிர்களும்; எல்லை கிழக்கு கந்தப்பிள்ளை மூத்ததம்பி பெண் நாகமுத்துவுக்கும் கனகசபை தம்பையாவுக்குமுரிய ஆதனங்கள். வடக்கு றோட்டு, மேற்கு தியாகர் யோகவனம் பெண் தையல்நாயகத்திற்குப் அம்பலவாணர் கனகசபைக்கு முரிய ஆதனங்கள். தெற்கு பூதர் வேலுப்பிள்ளையின் ஆதனம்.

துண்டுகளின் விபரம்:

றோட்டு

| | | |
|---|---|---|
| 8<br>கி. ப. 23 குளி1 | ஒ. ஷ. ப. 4. | 1<br>கி ப 23.<br>O 10<br>கிணறு $8\frac{1}{2}$ கு. |
| 7<br>கி. ப. 10. கு. 14. | | 2<br>கி. ப. 12. குளி6. |
| 6<br>கி. ப. 10. கு. 14. | | 3<br>கி. ப. 10 கு. 11 |
| 5<br>கி. ப. 13. கு. $12\frac{1}{2}$ | | 4<br>கி. ப. 8. கு. $15\frac{1}{2}$ |

குறிப்பு: உறுதி பார்வையிட விரும்புவோர் என்னிடம் அறிந்துகொள்ளலாம்.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை,
Commissioner and
Licensed Auctioneer,

தெல்லிப்பழை,
5—3—48.
Mis 265, 23-3-48.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தபுராணக் கவி நுட்பம்

## திருவிளையாட்டுப் படலம்

வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலப்பிள்ளை யவர்கள் வாய்க் கேட் டெழுதப்பெற்ற பிரதியிலிருந்து எடுத்த அரும் பெருங் குறிப்புக்கள் இப் [ ] பகரக் குறியீட்டுடன் வெளிபிடப்பட்டுள்ளன.

புரந்த ரன்முதற் புங்கவர் தம்முளத்
தரந்தை நீங்க வருச்சனை செய்துபின்
பரிந்து தாழ்ந்து பரவலும் ஆயிடைக்
கரந்து வள்ளல் கயிலையிற் போயினன்.

இந்திரன் முதலாந் தேவர்களனைவரும் தங்கள் உள்ளத்திற் கொண்ட கவலையகலும்படி பூசனை செய்து பின்னர்ப் பத்திபண்ணி வீழ்ந்து வணங்கியெழுந்து தோத்திரஞ் செய்தலும், திருவருள் வள்ளலாராகிய முருகக் கடவுள் உடனே அவ்விடத்தினின்றும் மறைந்து கைலாசகிரியை யடைந்தருளினர் என்பது கருத்து.

அரந்தை-சூரபன்மன் முதலிய அசுரர்களால் தங்களுக்கு நேர்ந்த இன்னல்; முருகனைப் பூசனைபுரிவோ ரெவருந் தங்கவலை நீங்கப்பெறுவ ரென்பது "அரந்தைநீங்க வருச்சனை செய்தலும்" என்பதனாற் பெறப் படும்; தேவர்கள் அரந்தை நீங்க அருச்சனை செய்தமையினால் உள்ளத்தில் உறைப்பான பத்தியோடு பூசித்தார்களென்பதும், பரிந்து என்பதனால் அப் பத்தி மேலீட்டினால், மனம முதலிய அந்தக் கரணங்கள் இறைவனிடத் திற் பதிய வழிபட்டுத் துதத்தாரென்பதும் பெறப்பட்டன; ஆயிடை என்பது காலத்தையும் இடத்தையுங் குறித்து நிற்றலின் "உடனே அவ்விடம்" எனப் பொருள்கொள்ளப்பட்டது இந்திரன் முதலாந் தேவர் செய்த பூசையையேற்று அவர்கட்கு அருள்செய்த மாத்திரத்தே மறைந்து கைலையை யடைந்தருளின ரெனறபடி. (124)

கதைத்தொடர்: மலைகளுட் சிறந்ததாகிய கைலையங்கிரியில் ஞான சொரூபியாகிய முருகவேள் சென்றருளுதலும் தேவர்களும் அவர்களுடைய தலைவனாகிய இந்திரனும் (பெருமான் மறைந்தமையையிட்டு) ஆச்சரிய முற்றாராய் அந்த மலையை விட்டகன்றனர்.

ஈசன் மைந்தன் இளையன் இமையவர்
பூசை செய்யப் பொருந்தலின் அவ்வரை
ஆசில் கந்த வரையென யாவரும்
பேச வாங்கோர் பெயரினைப் பெற்றதே.

தேவர்கள் பூசைசெய்யும் வண்ணம் சிவகுமாரரும் என்றுமிளையவருமாகிய சண்முகமூர்த்தி திருவுளஞ் சம்மதித்து, எழுந்தருளிய காரணத்தினால் அந்த மலைத்தானம் குற்றமற்ற (தூய்மையான) கந்தவெற் பென்று எவரும் பாராட்டும்படி ஒரு பெயரைப் பெற்றதென்பது கருத்து.

பொருந்துதல்-திருவுளஞ் சம்மதித்தல் உடம்படல் எழுந்தருளியிருத்தல் என்னும் பல பொருளைக் கொண்ட ஒரு சொல்லாம். கந்தசுவாமி யெழுந்தருளியிருப்பத் தேவர்கள் பூசைசெய்த காரணத்தினாற் கந்தவெற் பெனனுங் காரணப்பெயரைப் பெற்றதென்றபடி. பேசுதல்-பாராட்டுதல்.

ஆன கந்த வடுக்கலைத் தீர்ந்துபோய்
வான மன்னன் மனோவதி நண்ணினன்
ஏனை வானவர் யாவரும மவ்வவர்
தான மெய்தினர் தொன்மையிற் றங்கினர்

இந்திரன் அப்படியான தூய்மையோடு கூடிய கந்தவெற்பை விட்டகன்று மனோவதி யென்னுந் தானத்தை யடைந்தான்; (அப்படியே) மற்றைய தேவர்களும் தத்தம தானங்களை யடைந்து பழையபடி இருந்தார்கள் என்பது கருத்து.

"ஆனகந்த வடுக்கலைத் தீர்ந்து" என்பதனை "ஏனை வானவர் யாவரும்" என்பதனோடும சேர்த்துப் பொருள்கொள்க. மனோவதி-மனம்படியத்தக்க வளங்களோடு கூடிய இடம், இது மேருமலையிலே பிரமா முதலாந் தேவர்கட்குச் சூரபன்மன் முதலாம் அசுரர்களால் இடுக்கண் நேராவண்ணம் வசித்தற்குரிய ஒதுக்கிடம்; இங்கும் கைலாசத்திலும் சூரபன்மனுடைய ஆஞ்ஞை செல்லாதென்ப. (127)

உயவ லூர்திகோன் டோய்யெனு முன்னரே
கயிலை யங்கண் பேசிய கந்தவேள்
பயிலும் வீரரும் பாரிட மன்னரும்
அயலின் மேவர ஆயிடை வைகினன்.

தமது திருவுளச் சிந்தனையாகிய வாகனத்தைச் செலுத்திக்கொண்டு விரைவிற் கைலைமலையை யடைந்தருளிய கந்தசுவாமியானவர், (தமக்குத் தொண்டு செய்யும் இலக்கத்தொன்பான் வீரர்களும் பூதவீரர்களும் திருமருங்கில் அடைய அக்கந்தவெற்பின்கண் எழுந்தருளியிருந்தா ரென்பது கருத்து.

உயவல்-நினைப்பு; நினைத்தமாத்திரத்தே கைலையை யடைந்தருளினா ரென்றபடி; ஒய்யெனு முன்னரே யென்பதற்கு "இம்மென்னும் முன்னே" யென்றவாறு ஒய்யென்னும் வார்த்தையை உச்சரித்தற்கிடையில் எனப் பொருள் கொளளினும் பொருந்தும். பயிலும்-ஊடாடும்; பாரிடமன்னர்-பூதசேனாபதிகள் நூற்றெண்மர். (128)

திருவிளையாட்டுப் படலம் முற்றிற்று.


# விளம்பரம்

**என். எஸ். தாசன் கொம்பனி**
**(2-ம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம்)**

சிகப்புக் கை மார்க் இங்கிலீஷ் சீமேந்து லண்டன் 112 றுத்தல் பாக்செட்டுகளில் மேற்படி கொம்பனியில் கிடைக்கும்.

**மொத்தத்திற்கு ரூ. 8-50. சில்லறைக்கு ரூ. 8-75.**

Srd 43 12-3-48—9-4-48.


# செய்திக்கோட்டு

சாவகச்சேரிப் பகுதி வாசிகள் சென்ற செவ்வாய்க்கிழமை இரவு 7 மணியளவில் ஆகாசத்தில் ஓர் எரி வெள்ளியைக் கண்டனராம் அது தென்கிழக்கிலதோன்றி வடகிழக்கில் மறைந்தது. இவ் வெள்ளியின் தோற்றம் உலகுக்குக் கெடுதி விளைக்கலாம் என்று பேசிக்கொள்ளப்படுகிறது.

0 0 0

களனித் தொகுதியி லிருந்து வெற்றி பெற்று இப்போது நிதிமந்திரியாயுள்ள திரு ஜே ஆர். ஜெயவர்த்தனாவின் வெற்றியை ஆட்சேபித்துத் தொடர்ந்த வழக்கில், நீதிபதி வழக்காளி பக்கக் கூற்றை நிராகரித்துவிட்டார், வழக்காளி திரு. ஜெயவர்த்தனாவுக்கு 8000 ரூபாசெலவாக இறுக்கவேண்டும் என்றும் தீர்ப்பளிக்கப்பட்டிருக்கிறது.

0 0 0

அல்வாய் வடக்கில் வசித்த வல்லிக்குட்டி எனபவன் பனைமரத்தில் ஏறுகையில் தவறிவிழுந்து படுகாயமடைந்துஆஸ பத்திரிக்கு எடுத்துச் செல்லுகையில் மரணமானான்.

0 0

துன்னாலை தெற்கில் வசிக்கும் செல்லத்தம்பி அவ்வூர் கந்தையா என்பவரைக் கல்லால் அடித்துக் காலை முறித்தார் என்ற குற்றத்தின்பேரில் பருத்தித்துறைநீதிபதியால் இரண்டு வருஷத்துக்கு 200 ரூபா நன்னடத்தைப் பிணையில் விடப்பெற்றார். காயமடைந்தவருக்கும், நீதிஸ்தலச் செலவுக்குமாக எதிரி 75 ரூபா இறுக்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

0 0 0

இந்த மார்ச்மாதம் முடிந்தவுடன்புடைவை விநியோகக் கட்டுப்பாடு முடிந்துவிடும் என்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதாவது "கூப்பன்"கள் இன்றியே புடைவை வேண்டிய அளவுக்குப் பெற்றுக்கொள்ளலாகும். விநியோகக் கட்டுப்பாடு நீங்கினாலும், விலைக் கட்டுப்பாடு தொடர்ந்து இருக்குமாம்.

## நால்வர் திருவுருவப் படம்

சைவசமய குரவர்களாகிய சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்னும் நால்வருடைய திருவுருவப் படம் பெரியபிரமாணத்தில் தரிசிப்போருடைய உள்ளத்தை உருக்கும் முறையில் (வர்ணப் படம்) ரவிவர்மா அமைப்பில், பக்தியுடன் வைத்துப் பூசிக்கத்தக்க முறையில் வெளி வந்துள்ளது. இதனை அமைப்பித்துவெளியிட்டவர் தென்னிந்தியா கோயம்புத்தூர் பேரூர் நால்வர் மடாலயம் திரு C. S. சுப்பராயனவர்களாவர், "பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல் போற்றி, ஆழிமிசைக் கன்மிதப்பி அணைந்தபிரா னடிபோற்றி, வாழிதிரு நாவலூர் வன்தொண்டர் பதம்போற்றி, ஊழிமலி திருவாத வூரர் திருத்தாள்போற்றி' என்ற திருவிருத்தத்தின்படி முதல் சம்பந்தர், இரண்டாவதாக அப்பர், மூன்றாவது சுந்தரர், நாலாவது மாணிக்கவாசகராக, இப் படம் மாணிக்கவாசகர், அப்பர், சம்பந்தர் சுந்தரர், என்ற முறையில் அமைக்கப் பெற்றுளது சிவநாமாவலியில், வாதவூரீசா. வாகீசா, சம்பந்தமூர்த்தி, சுந்தரேசா, என்ற வாக்கியமும் வழங்குகிறது. ஆனதினால் இப்படத்தின் அமைப்பும் கொள்ளத்தக்கதாகும் இது சமய குரவர் காலத்தை யுத்தேசித்து அமைக்கப்பெறறதுபோலும் சைவசமயிகள் இல்லங்களிலும், மடாலயம் வித்தியாலயம், வாசகசாலைமுதலாம்சைவ தாபனங்களிலும் இப்படம் கண்ணாடியிலிட்டு வைத்துப் பூசிக்கத்தக்கதாகும். பிரதியொன்றன் விலை 1 ருபா 10 அணா (ரூபா 1 சதம் 60) பிரதிகள் மேலே சொல்லபபட்ட விலாசத்திற் பெற்றுக்கொள்ளலாகும். எயக்குதவிய படத்தை உவந்தேற்றும்,

## தேகவியோகம்
### ஸ்ரீமதி அன்னம்மா

நீடித்த காலம் மலாய்நாட்டில் டக்டராகக் கடமை பார்த்தவரும், பெரிய கடைக்கணித்தாசவுள்ள மலாயன் டிஸ்பென்ஸரி யதிபருமாகவுள்ள திரு க. அருளம்பலமவர்களின் மனைவியாராகிய ஸ்ரீமதி. அன்னம்மா, தம்மைச் சடுதியிற் பீடித்த நோய்காரணமாக சென்ற ஞாயிற் றுக்கிழமை (21-3-48) பகல் 11 மணியளவில், கொட்டடியிலுள்ள தமது இல்லத்தில் நாயகன் மக்கள் சுதற சுற்றமித்திரர் அயலார் புலம்ப இவ்வுலகவாழ்வை யொருவினர்: இவருடைய ஈமக்கிரியைகள் அடுத்த நாட் பகல் 2 மணி வரையில் வில்லூன்றி மயானத்தில் கணவன் மகனென்னும் இவர்களாற் பல சன சமூகத்தில் முறைப்படி செய்யப்பட்டன; இவர் இல்லறவொழுக்கம், தெய்வபக்தி இன்சொல், விருந்தோம்பல் முதலிய சுகுணங்களோடும் நற்செயல்களோடுங் கூடிய ஒரு உத்தமி இறக்கும்போது வயசு 48. இவரது அகால மரணம் வருந்தற்பாலது, இவருடைய ஆன்மா சாந்தியடைக,

## நன்கொடை

நயினார்தீவை ஜெனனபூமியாகக் கொண்டவரும், ஊர்காவற்றுறையில் ஸ்ரீமான் பி ம. தம்பியையா அவர்களின கடையில் கணக்கப்பிள்ளையாயிருந்து கடமையாற்றியவரும் 1935ம் ஆண்டு மாசிமீ 30ம் உ காலஞ்சென்றவருமாகிய திரு. இளையதம்பி வேலாயுதபிள்ளை யவர்களின் பதின்மூன்றும் வருடம் 19-3-48 வெள்ளிக்கிழமையன்று யாழ்ப்பாணம் விவேகானந்த அச்சியந்திரசாலையும், புத்தக சாலையும் வைத்து நடத்திவரும் ஷையாரின் புத்திரர்களால் அன்னாரின் ஞாபகார்த்தமாகச் சைவபரிபாலன சபைக்கு நன்கொடையாக அனுப்பிய ரூபா 2 பெற்றும். —மனேஜர்.


# பசந்த லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல் ரத்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். இந்திரியம் சட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும்தீர்ந்து, தேகத்துக்குப் பலம் உண்டாக்கும்.

ஒருறாத்தல் விலை ரூபா 25
அரைறாத்தலுக்கு ரூபா 12-50
கால்றாத்தல் ரூபா 6-25

விலாசம்:

**க. ஆறுமுகம்பிள்ளை**

நெ. 156, செக்கடித்தெரு கொழும்பு
Std. 1. 26—3—47 to 1—4—48

# கந்தசாமி வைத்தியர்
## அமிர்த சர்க்கரை லேகியம்

தாதுவிருத்தி யுண்டாகி நரசிங்கம் போன்ற தேக பலத்தைத் தருவதில இணையற்ற லேகியம். நெடுநாட்பட்ட வாதங்கள் எவற்றையும் தீர்க்கும். பித்தக்கிறுதி பாண்டு குன்மம் நித்திரையின்மை மூளைக் குழப்பம் இருமல் அரிகுரல் குடற் புண் மலக்கட்டு மூலவாய்வு அசீரணம் இவைகளை மாற்றி நல்ல பசி உண்டாக்கும். மேகம் மேகத்தடிப்பு நீரழிவு நீர்க்கடுப்பு நீங்கும். கெற்பணிகட்கு உண்டாகும் வாந்தி அரோசியம் இருமல் மலசலக்கட்டு நீங்கும். கருவை அழியாமல் காக்கும். பாலர்கட்கு கணை பாண்டு இராக்காய்ச்சல் இருமல் தீர்க்கும் இணையற்ற சஞ்சீவி.

பெரியவர்கள் காலை மாலை 1 கழஞ்சு வீதம். சிறியவர்கள் கால் கழஞ்சு அரைக்கழஞ்சு வீதமும் சாப்பிடலாம்

**கால் றாத்தல் விலை ரூபா 5-00**

வீ. பீ. பி. யில் அனுப்புவோம்.

விலாசம்:

**ஆயுள்வேத சிவசோதி மெடிக்கல்ஹோல்**

— வல்வெட்டித்துறை —

Std 25 1-7-47—30-6-48 (செ)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம், சைவபரிபாலன சபையார்

# வெளியிட்ட சமய நூல்கள்

விலை: ரூ ச

சைவத்திருநெறித் தோத்திரத்திரட்டு — 75

இதன்கண் அகத்தியர் தேவாரத்திரட்டு முழுவதும் திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, எல்லா மூர்த்திகளுக்குமாய திருப்புராணம் பட்டினத்தடிகள் பாடல், திருப்புகழ் கந்தரலங்காரம், திருமுருகாற்றுப்படை வெண்பாக்கள், தாயுமானவர்பாடல் முதலியனதொகுக்கப்பட்டுள்ளன; இவற்றேடு S. S. C. பரீட்சைகள், சமய பாடத்திற்கென விதிக்கப்பட்ட தேவார திருவாசகப் பதிகங்கள் நவமாகச் சேர்க்கப்பட்டுள்ளன. இங்குள்ள சைவ ஆங்கில தமிழ்க் கல்லூரிகளிலும் கலாசாலைகளிலும் சமய பாடமாக விதிக்கப்பட்டுள்ளது. சைவ நன்மக்கள் எவரிடத்தும் ஒருபிரதி ஆவசியகம் இருத்தல் வேண்டும்.

சைவபோதம் முதற் புத்தகம் (வசன பாடங்கள்) — 50

,, இரண்டாம் புத்தகம் ,, (அச்சில்) — 60

,, மூன்றும்புத்தகம் (திருவருட்பயன்) உரையுடன்... 75

[இச் சைவபோதம் மூன்றனுள் முதற் புத்தகமும் இரண்டாம் புத்தகமும் ஆசிரியர் ஸ்ரீ சு. சிவபாதசுந்தரமவர்களாற் சைவ சமயத்தை அறிய விரும்புவோர்க்கு ஆரம்ப பாடங்களாக பல மேற்கோள்களுடன் இலகுவான வசன நடையில் எழுதப்பெற்றுள்ளனமூன்றும் புத்த சித்தாந்த சாத்திரம் பதினான்கனு ளொன்றாகிய திருவருட் பயனுக்கு. மேற்படி ஆசிரியர் இலகுவான நடையில் எழுதியசிறந்த உரையாதும் இம்மூன்று போதங்களும் சைவக் கலாசாலைகளிற் சிறுவர்க்குச் சமய பாடமாக ஊட்டப்படுவன.

திருக்குறள் .... .... 1 25

(முதல் 30 அதிகாரம், அறத்துப்பால் முழுவதும்) பதவுரை, கருத்துரை விசேடவுரை ஆங்கில மொழிபெயர்ப்பு நூலாசிரியர் வரலாறு என்னு மிவைகளுடன் கூடியது.

சைவக்கிரியை விளக்கம் — 50

சைவமக்கள் செய்யும் சில கிரியைகளின் உட்பொருளை விளக்கி, ஸ்ரீ சு. சிவபாதசுந்தரமவர்களால் எழுதப்பட்டது.

நமச்சிவாயமாலை உரையுடன் (அச்சில்) — 10

சோமவார விரத மான்மியம் — 18

கந்த விரத மான்மியம் — 12

சிவபூசைத் திரட்டு — 18

சைவசமய சீலர்கள், தேவாரம் திருவாசகம் முதலிய அருட்பாக்களைக் கொண்டே தங்கள் ஆன்மார்த்தபூசையைக் கிரமமாகச் செய்யும்வண்ணம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்களால் தொகுக்கப்பெற்றுள்ளது.

மயூரகிரிப் புராணம் 1 50

வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலப் பிள்ளையவர்கள் எழுதிய பொழிப்புரையுடன், பண்டிதர் ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை எழுதிய விசேடவுரை, உரையாசிரியர் வரலாறு என்னு மிவற்றேடும் வித்துவ சிரோமணி யவர்களின் நாதிமைப் படத்தோடுங் கூடியது.

திருக்குறள் 10 (26—34) அதிகாரங்கள் — 75

இவை S. S. C. பரீட்சைக்குச் சமய பாடமாகவுள்ளது.

சமய குரவர், சந்தான குரவர் சரித்திரச் சுருக்கம் 75

---

## வியாபாரத்திற்கழகு விளம்பரஞ் செய்தல்

---

# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா

**134,3670**

**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

### பங்குப்பணங் கட்டுமுறை.

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்.

### தினசரிப் பற்றுவரவு

எச்சமித்து சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

### தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

### உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

### கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
மனேஜர்.

Std 14 20-11-46—20-11-[illegible] (இ)

---

# இலங்கை வங்கி

(1938-ம் ஆண்டு 53-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி சட்டபூர்வமாக இணைக்கப்பட்டது)

## இலஙகை அரசாங்கத்தின் வங்கிக்காரர்

| | | |
|---|---|---|
| வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூபா | 4, 500, 000, 00 |
| கொடுக்கப்பட்ட வேதனம் | ,, | 3, 000, 000, 00 |
| சேமநிதி | ,, | 2, 600, 000. 00 |

**தலைமைக்காரியாலயம்:-** பிரிஸ்டல்வீதி, கொழும்பு.

**நியுயோர்க் ஏஜெண்டுகள்:-** ஏர்விங் ட்ரஸ்ற் கம்பனி.

**லண்டன் ஏஜெண்டுகள்:-** பார்க்கிளேஸ வங்கி.

**கிளைக்காரியாலயங்கள்:-** புறக்கோட்டை, (கொழும்பு) கண்டி, காலி. திருக்கோணமலை, பாணந்துறை, குருநாகலை (பழைய நகரமண்டபம்), வதுளை

**யாழ்ப்பாணத்துக் காரியாலயம்:-** 242, ஆஸ்பத்திரிரேட், யாழ்ப்பாணம்.

வாடிக்கைகாரர்களுக்குப் பல விசேஷ வசதிகள் இவ்வங்கி செய்துகொடுக்கின்றது.

**நடைமுறைக்கணக்கு:-**

இலங்கையில் (திருக்கோணமலை குருணாக்கல், வதுளை ஒழிந்த) உள்ள எல்லாப் பிரதான நகரங்களிலும் மாற்றக்கூடிய "செக்"குகள்கொமிஷன் இன்றிப் பெற்றுக்கொள்ளப்படும்.

**சேமிப்புப் பணம்:-**

ஆகக்கூடிய தொகை ரூபா 10, 000. வட்டி நூற்றுக்கு வருடம் ஒன்றுக்கு 2 விகிதம் கேட்டநேரம் திருப்பிக் கொடுக்கப்படும்.

**நிரந்தர சேமிப்பு:-**

இதற்கான விகிதம் முதலியவற்றைக் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

**கடன்களும் மேலதிகமாகக் கடன் பெறுதலும்:-**

அங்கீகரிக்கப்பட்ட பிணையின் பேரிற் கொடுக்கப்படும்.

**நாணயமாற்று:-**

இதற்கான ஏஜெண்டுகள் உலகெங்கும் உண்டு.

**பிறநாட்டு விவகாரப் பகுதி:-**

ஜீ. ஓ. எச். கட்டிடம், யோர்க் வீதி, கொழும்பு.

இந்தியா, மலாய்நாடுகளுக்கு அனுப்பக்கூடிய உண்டியல், தந்தி, மாற்றுப் பத்திரங்கள் விஷயமாக விசேஷ வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

**T. S. முத்துலிங்கசாமி**
ஏஜெண்டு.

Std. 7-8 29 1-8—30-4

---

# பேராசிரியர் கா. இளையதம்பி

அவர்கள் இயற்றிய

| | | |
|---|---|---|
| பூகோளம் | I-ம் பாகம் | 1—65 |
| பூகோளம் | II-ம் பாகம் | 1—60 |
| மூன்றுந்தரக் கணிதம் | | 75 |

இவை ஆங்கில பாடசாலைகளிலும் உபயோகிக்கத்தக்கன எம்மிடத்திலும் பிரபல புத்தகசாலைகளிலும் பெறற்பாலன

E. PARANCHOTHY,
Teacher,
Vaidyeswara Vidyalayam
Vannarponnai, Jaffna.

M 258 16,23-3-48

---

# நாதன்ஸ் பிரசாரம்

மலேயாவுக்குச் சகல வசதிகளுமடங்கிய பிரயாணக் கட்டணம் குறைக்கப்பட்டிருக்கிறது

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் - சென்னை - பினங் ரூபா | 170 |
| ,, நாகபட்டணம் | 115 |

யாழ்ப்பாணமிருந்து சென்னைவரை றெயில் இரண்டாம் வகுப்பு அன்றேல் ஆகாயவிமானத்தில் உல்லாசப் பிரயாணம் கப்பலில் டெக் உட்படக் கட்டணம் ரூபா 190

**எஸ். ஆர். எஸ். நாதன்**

21/3, ஸ்ரான்லி ரேட் :: யாழ்ப்பாணம்

எங்கள் கிளைஸ்தாபனங்கள்: சென்னபட்டணம், நாகபட்டணம், சிங்கப்பூர், கொழும்பு முதலியவிடங்களி லுண்டு

Std. 22. 6-6-47—6-6-48

---

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

---

Printed and Published by Pandit V. T. Sambandhan, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Tuesday March 23, 1948

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org